RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1310

# சங்ககாலப் போர் மரபுகளும் - வேள்பாரியும்

ஆ. கார்த்திக் [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி, கோயம்புத்தூர்-641018, தமிழ்நாடு, இந்தியா

# Sangam Age War Traditions and the Novel Velpari

A. Karthik [a, *]

[a] Department of Tamil, Government Arts College, Coimbatore-641018, Tamil Nadu, India

* Corresponding Author:
arukarthi1989@gmail.com

Received: 25-05-2022
Revised: 02-09-2022
Accepted: 28-09-2022
Published: 19-11-2022

Check for updates

**ABSTRACT**

War has been a part of the lives of the people of the Sangam age. They did not take war merely as a matter of speech, but they treated it in accordance with the rules. This article compares the war with the war traditions of the Sangam age, the war traditions mentioned by Tholkappiyar. And with the novel Velpari, written by S. Venkatesan. If a king wants to wage war against another country, he can wage war only according to the rules. First of all, through spies, they will know the condition of the enemy country and want to capture the wealth of the country, that is, cattle-lifting. Then they will wage war in order to rescue the cattle. The literature highlights the traditions of war, such as the king who won after the end of the war, wearing the flower (albizia lebbeck/woman's tongue). Therefore, although there are innumerable war traditions in the Sangam age, only espionage, cattle-lifting, declaration of war, and flowering have been examined in the article. They have also been examined in terms of comparative criticism and descriptive criticism.

**Keywords:** Sangam Age, Tholkappiyar, Velpari, Cattle-lifting, Traditions of war

## முன்னுரை

காதலும் வீரமும் தங்களின் இருகண்களெனப் போற்றி வந்த சங்ககால மக்களின் வாழ்க்கை முறையினை இரண்டாகப் பகுத்தனர். ஒன்றை அகவாழ்க்கை என்றும் மற்றொன்றைப் புற வாழ்க்கை என்றும் பிரித்த அம்மக்கள் அகவாழ்க்கையைக் களவும் கற்புமாக வாழ்ந்து கழித்ததும் புற வாழ்க்கையைப் போர்க்களத்தில் அற்பணித்ததும் எல்லோரும் அறிந்த ஒன்றாகும். அப்புற வாழ்க்கையாகக் கருதப்பட்டப் போர் முறைகளுக்கு இலக்கணம் வகுத்தனர் நம்முன்னோர்கள். அவர்களது போர்முறை நேர்மையாக இருந்தது. காலை சூரிய உதயத்தின் போது முரசறைந்து போர் தொடங்குவர். சூரியன் மறையும் வரை மட்டுமே போர் நடைபெற்றது. முரசறைந்து போரை நிறுத்துவர். எத்தனை நாள் போர் ஆயினும் இதுவே வழக்கமாக இருந்தது. பகைவன் ஆயுதத்தை இழந்தபோதும், போரில் தோற்ற போதும், போரில் தோற்று ஓடும் போதும் அவர் மேல் படை செலுத்தாத அறநெறி இருந்தது. அவர்களுக்கு தகுந்த வாய்ப்பளிக்க மறுநாள் போர் செய்தனர். ஓடி ஒளிந்தாரைக் கொல்லாமல் அவர்கள் வரும் வரை காத்திருந்து போர் புரியும் வீரம் இருந்தது. இறந்தவர்களைக் கண்டு இரங்கும் குணம் மன்னர்கள் மத்தியில் காணப்பட்டன.

ஒற்றறிதல், ஆநிரை கவர்தல், போரை அறிவித்தல், நிமித்தம் பார்த்தல், பூப்புனைதல், பாசறை அமைத்தல், பகைவர் மீது வஞ்சினம் கொள்ளுதல், போர்ப்படையை ஆயத்தப்படுத்துதல், முடிசூடுதல் ஆகிய சங்ககாலப் போர் மரபுகளைச் சாகித்திய அகாதெமி விருது பெற்ற எழுத்தாளர் சு. வெங்கடேசன்

அவர்கள் படைப்பில் உருவான வீரயுக நாயகன் வேள்பாரி எனும் புதினத்தோடு ஒப்பிட்டுக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தொல்காப்பியப் போர் மரபு

வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை மற்றும் பாடாண் போன்ற புறத்திணைகள் யாவும் சங்ககாலப் போர் மரபுகளை எடுத்துரைக்கும் கருவூலமாகத் திகழ்கின்றன. பண்டைக் காலத்தில் பேரரசர்கள், சிற்றரசர்கள் மற்றும் வீரர்கள் பற்றிய செய்திகளையும் போர் மரபுகளையும் புறத்திணைகளே எடுத்துக்கூறுகின்றன.

“அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்

புறத்திணை இலக்கணம் திறம்படக் கிளப்பின்

வெட்சி தானே குறிஞ்சியது புறனே

உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே”

என்ற நூற்பாவில் வெட்சித் திணையின் புறனாக குறிஞ்சி கூறப்படுகிறது. வெட்சித்திணையானது குறிஞ்சிக்கு எவ்வாறு புறனானது என்று உரைக்கும் தொல்காப்பியர், நிரைகோடல் குறிஞ்சிக்குரிய மலைசார்ந்த நிலத்தின்கண் நிகழ்தலாகும். அந்நிலத்தின் மக்கள் பிற நாட்டு ஆநிரைகளைக் களவிற்கோடல் ஒரு புடை குறிஞ்சிக்கு உரித்தாகிய களவோடு ஒத்திருப்பதாலும் சூடும் பூவும் அந்நிலத்திற்கே உரியது என்பதாலும் வெட்சிக்கு குறிஞ்சி புறனாயிற்று எனலாம் (Ilampooranar, 2005).

படை செல்லுகின்ற ஆரவாரம், நற்சொல்லை ஆராய்தல், பிறர் அறியாமல் ஒற்றறிதல், சூழ்ந்தவர்களை அழித்தல், பசுக்கூட்டத்தைக் கவர்தல், அந்நேரத்தில் பகைவரோடு செய்யும் சண்டை, பசுக்கூட்டங்களைத் தன் நாட்டிற்குக் கொண்டு வருதல், அதனைப் பங்கிடுதல், கள்ளுண்டு மகிழ்தல் போன்றவைகளெல்லாம் வெட்சித் திணைக்குரிய துறைகளாகச் சொல்லப்படுகின்றன என்பதனைத் தொல்காப்பியர்,

“படையியங்கு அரவம் பாக்கத்து விரிச்சி

புடைகெடப் போகிய செலவே புடைகெட

ஒற்றின் ஆகிய வேயே வேய்ப்புறம்

முற்றின் ஆகிய புறத்துஇறை முற்றிய

ஊர்கொலை ஆகோள் பூசல் மாற்றே

நோயின்றி உய்த்தல் நுவல்வழித் தோற்றம்

தந்துநிறை பாதீடு உண்டாட்டுக் கொடையென

வந்து ஈரேழ் வகையிற்று ஆகும்.”

எடுத்துரைக்கிறார். இவையாவும் போரின் தொடக்க நிலையில் நிகழக்கூடிய சம்பவங்கள். இவை போன்றே பிற துறைகளிலும் கூறப்படுகின்றன (Ilampooranar, 2005).

## ஒற்றறிதல்

சங்க காலத்தில் போர் நடக்க மூலக்காரணமாக இருந்தவர்கள் ஒற்றர்கள். தூதுவர்களைப் போலவே ஒற்றர்களையும் நியமித்தார்கள் மன்னர்கள். ஒற்றர்கள் பலர் உளவு பார்த்ததன் விளைவாக அரசர்கள் பகை நாட்டை கைப்பற்றி இருக்கிறார்கள். இவ்வொற்றர்கள் பல வகையான சத்தங்களையும் ஓசைகளையும் எழுப்பி தகவல்களைப் பரிமாறிக் கொண்டனர். உள்நாட்டு மக்களையும் வெளிநாட்டு மக்களையும் உளவு பார்க்கும் செயலில் அவர்கள் ஈடுபட்டனர். அமைச்சர்கள், அரசு அலுவலர்கள், அரச

குடும்பத்தினர், பகைவர்கள் ஆகியோர்களை உளவு பார்த்து வந்தனர். பாணர்கள் வேடத்திலும் இரவலர்கள் வேடத்திலும் அவர்கள் பகை நாட்டை உளவு பார்க்கும் நிலை சங்ககாலத்தில் காணப்பட்டன. ஒற்றர்களின் கருத்தை மன்னர்கள் முழுமையாக நம்பாமல் ஒற்றர்களைக் கண்காணிக்க மற்றொரு ஒற்றர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர். சில நேரங்களில் மன்னர்களே மாறுவேடத்தில் ஒற்றறியும் முறையும் காணப்பட்டது. சங்க காலத்தில் மன்னர்கள் ஒற்றர்களைப் பயன்படுத்தினார்கள் என்பதற்கு கோவூர்கிழாரின் புறநானூற்று வரிகளை நினைவு கூறுவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். புறநானூற்றில் 47-வது பாடலில் கோவூர்கிழார் சோழன் நெடுங்கிள்ளியைப் பாடும்போது,

"வள்ளியோர்ப் படர்ந்து புள்ளின் போகி,

நெடிய என்னாது சுரம்பல கடந்து

வடியா நாவின் வல்லாங்குப் பாடி

பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி,

ஓம்பாது உண்டு, கூம்பாது வீசி,

வரிசைக்கு வருந்தும் இப்பரிசில் வாழ்க்கை

பிறர்க்குத் தீதுஅறிந் தன்றோ? இன்றே; திறம்பட

நண்ணார் நாண, அண்ணாந்து ஏகி,

ஆங்கினிது ஒழுகின் அல்லது, ஓங்கு புகழ்

மண்ஆள் செல்வம் எய்திய

நும்ஓர் அன்ன செம்மலும் உடைத்தே"

என்ற வரிகளின் மூலமாக, நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் நெடுநாள் பகை இருந்து வந்தது. இளந்தத்தனார் என்னும் புலவர் நலங்கிள்ளியைப் பாடி பரிசில் பெற்று விட்டு அடுத்து நெடுங்கிள்ளியிடம் வரும்பொழுது அவர் புலவனை ஒற்றன் எனத் தவறாகக் கருதி மரண தண்டனை விதிக்கிறார். இதை அறிந்த கோவூர்கிழார் நெடுங்கிள்ளியிடம் சென்று 'பழம் இருக்கும் மரங்களை நாடி வரும் பறவைகளைப் போல், பாலைவனம் பலவற்றைக் கடந்து வள்ளல்களிடம் பரிசு பெற்றுத் தான் மட்டும் உண்ணாமல் மற்றவர்களுக்கும் கொடுத்து பகிர்ந்துண்டு வாழும் ஒப்பற்ற வாழ்க்கை எங்களுடையது. இதனைத் தவிர்த்து நாங்கள் யாருக்கும் தீங்கு விளைவிக்க மாட்டோம். இங்கு வள்ளல்கள் எனும் பெயரில் நீர் ஒருவர் மட்டும் இல்லை, இன்னும் எத்தனையோ வள்ளல்கள் இருக்கிறார்கள்' என்று கடிந்து பாடியதைக் கேட்டு தன் தவறை உணர்ந்து இளந்தத்தனார்க்குப் பரிசு கொடுத்து அனுப்பினார். இதன் மூலம் ஒற்றர்களை நியமித்த அரசர்கள் சங்க காலத்தில் வாழ்ந்து இருக்கிறார்கள் என்பது தெரிகின்றது (Subramaniyan, 2010a).

## திருக்குறளில் ஒற்றறிதல்

ஒற்றர்கள் எப்படி எல்லாம் செயல்பட வேண்டும் என்பதற்கு வள்ளுவர் சில கருத்துக்களை முன்மொழிந்துள்ளார். ஒற்றறியும் பொருட்டுத் தேவையெனில் துறவர வேடம் தரித்து முனிவர் போல் நடித்தும் தேவையானச் செய்திகளை அறிய வேண்டும். பகைவரிடம் பிடிபட்டாலும் அவர்கள் நெறிகளை மீறித் துன்பங்கள் செய்தாலும் மனதில் உறுதி கொண்டு தன் நாட்டைக் காட்டிக் கொடுக்காமல் இருத்தல் வேண்டும் என்பதனை,

"துறந்தார் படிவத்த ராகி இறந்தாராய்ந்து

என்செயினும் சோர்விலது ஒற்று"

என்ற குறட்பாவின் வழி வள்ளுவர் குறிப்பிடுகிறார் (Parimelalhagar, 2002).

## வேள்பாரியில் ஒற்றறிதல்

பறம்பு நாட்டில் நடைபெறும் விழாக்களில் மிகவும் சிறப்பான விழாவாகக் கருதப்படுவது கொற்றவை விழாவாகும். கொற்றவை விழாவைக் காணப் பாரியும் கபிலரும் அமர்ந்திருந்தனர். இவ்விழாவைக் காண பல ஊர்களில் இருந்து பாணர்கள் வருகை தந்திருந்தனர். கூத்துக் களத்தில் கொற்றவைக்கு முன்பாக பல இனக்குழுக்களால் கொண்டுவரப்பட்ட பழக்கூடைகள் வைக்கப்பட்டிருக்கும். அங்கு மறைந்து வாழும் தேவாங்கு விலங்கு எந்தக் கூடையில் உள்ள பழங்களை எடுத்து உண்ணுகிறதோ அன்று அந்த இனக்குழுவின் விழாவாகக் கருதப்பட்டு கூத்து நிகழ்த்தப்படும். பறம்பு நாட்டின் செல்வமாகக் கருதப்பட்ட தேவாங்கு விலங்கு பற்றி மற்றவர்கள் எப்படி அறிந்தனர் என்று பாரியிடம் கபிலர் வினவிய போது அதற்குப் பாரி, கொற்றவை விழாவிற்கு வருகை தரும் பாணர்களுக்கு மத்தியில் பாணர்கள் வேடத்தில் ஒரு சில ஒற்றர்களும் வருவதுண்டு என்றார். "ஏன் அவர்களை அடையாளம் காண முடியவில்லை" என்று கபிலர் வினவ அதற்கும் பாரி "பறம்பு நாட்டை உளவு பார்க்க வந்த ஒற்றர்கள் அவர்கள் என்று தெரிந்தும் நான் தண்டிப்பதில்லை. ஏனென்றால் அவர்கள் பாணர்கள் வேடத்தில் உள்ளார்கள். தன்னை நம்பி வரும் பாணர்களை நான் எப்படித் தண்டிப்பது" என்று கூறியதும் கபிலர் பாரியை வியந்துப் பார்த்தமைக்கு எல்லையே இல்லை என்பதைப் புதினத்தின் வழி உணரமுடிகிறது.

## ஆநிரை கவர்தல்

ஒரு நாட்டின் செல்வமாகக் கருதப்படுவது ஆநிரை. ஆநிரை கவர்தல் போரின் தொடக்கமாய் அமைந்தது. ஆநிரை(பசுக்கூட்டங்கள்) கவர்வோர் வெட்சிப் பூ அணிந்துகொள்வர். அவர்கள் நற்குறி கொண்டே தங்கள் பணியினைத் தொடங்குவர். வீரர்கள் நற்சொல் அல்லது விரிச்சி கேட்க ஊருக்குள் சென்று நோக்குவர். பின் உளவு பார்ப்பர். ஆநிரைகளைக் கவர்வதைத் தடுப்பவர்களுடன் போர் தொடுப்பர். பின் வெற்றிக்குரிய தெய்வமான கொற்றவையை வணங்கி கள்ளுண்டு மகிழ்வர். ஆநிரை கவர்தல் என்பது இன்னொருவருடைய செல்வத்தைத் திருடும் செயலாக இருந்தாலும் அதுவே அறமாகப் போற்றப்பட்டது. பசுக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கைவிட, எதிரியின் பசுக்கூட்டமாகிய செல்வத்தைக் கொள்ளையடித்தலே ஆநிரை கவர்தலின் நோக்கமாக இருந்தது. ஆநிரைகளை மீட்பவர்கள் கரந்தைப்பூ அணிந்து போரிடுவது வழக்கமாகும்.

"அந்தஞ் செல்வோ ரலறத் தாக்கிக்
கைப்பொருள் வௌவுங் களவோர்
வாழ்க்கைக் கொடியோர்" (Subramaniyan, 2010a)

என்ற பெரும்பாணாற்றுப்படை வரிகளின் மூலமாகவும்

"வலிமுன்பின் வல்லென்ற
யாக்கைப்புலிநோக்கிற்
சுற்றமை வில்லர் சுரிவளர் பித்தையர்
அற்றம் பார்த் தல்குங் கடுங்கண் மறவர்தம்
கொள்ளும் பொருளில ராயினும் வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர்
வௌவலிற்
புள்ளும் வழங்காப் புலம்புகொள் ஆரிடை" (Subramaniyan, 2010b)

என்ற கலித்தொகை வரியின் மூலமாகவும்

"கல்லென் பேரூர்க் கண நிறை சிறந்தன

வவ்வில் எயினர் மன்றுபாழ் பட்டன

மறக்குடி தாயத்து வழிவளஞ் சுரவாது

ஆறக்குடி போலவிந் தடங்கினர் எயினரும்” (Subramaniyan, 2011)

என்ற சிலப்பதிகார வரிகளின் மூலமாகவும் பாலைநில மாந்தர்கள் வழிப்போக்கரைத் துன்பப்படுத்தி அவர்கள் கொண்டு சென்றப் பொருட்களைப் பறித்துக் கொண்டும் பொருளோடு வராதவரின் கைகால்களைத் துண்டித்து அவர்களிடமிருந்து ஆநிரைகளை கவர்ந்து சென்றதையும் அறியமுடிகின்றது (Subramaniyan, 2010b).

## வேள்பாரியில் ஆநிரை கவர்தல்

சங்க இலக்கியத்தில் கபிலர் பாரி மன்னனின் புகழையும் அவனின் வீரத்தையும் பல பாடல்களில் பாடியுள்ளார். அவர் சொன்ன ஒரு சில குறிப்புகளை வைத்துக்கொண்டும் சில புனைவுகளைக் கலந்தும் சாகித்திய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர்களுள் ஒருவரான சு. வெங்கடேசன் அவர்கள் வேள்பாரி எனும் புதினத்தைப் படைத்துள்ளார். புதினத்தில் பல்வேறு போர் மரபுகளை எடுத்துக் கூறியிருப்பினும் பறம்பு நாட்டில் தெய்வவாக்கு சொல்லும் ஒரு விலங்கினைக் கைப்பற்ற பாண்டியர்கள் தொடுத்த போர் தொல்காப்பியர் கூறிய போர் முறைகளோடு ஒத்திருப்பதைப் புதினத்தின் வழி அறிய முடிகிறது.

குலசேகரப் பாண்டியனின் மகனான பொதிய வெற்பனுக்கும் கடல் வணிகத்தில் தலைசிறந்தவரான சூல்கடல் முதுவனின் மகள் பொற்சுவைக்கும் திருமணம் நிகழ்த்த மதுரையே மணவிழா பூண்டிருந்தது. அம்மணவிழாவிற்கு வெங்கல் நாட்டு மன்னன் மையூர்கிழாரும் மற்ற சிறுகுடி மன்னர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். வியப்பைத் தரக்கூடிய வகையில் ஏதாவது ஒன்று திருமணப்பரிசாக வழங்கி பாண்டிய மன்னனின் அன்பைப் பெறலாம் என்று திட்டமிட்டு காமன் விளக்கை தயார் செய்துகொண்டிருந்த வேளையில் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. பறம்பு நாட்டின் செல்வமாகக் கருதப்படும் தெய்வவாக்கு(தேவாங்கு) விலங்கு வெள்ளத்தில் அடித்துவரப்பட்டது. இது என்ன விலங்கு என்று பலரும் யோசித்துக்கொண்டிருக்கும் சூழலில் மூன்றேர் உழவன் ஒருவன் அது பறம்பு நாட்டின் செல்வம் என்றும் பாரி இதனை தெய்வமாகக் கருதி தேவவாக்கு சொல்லும் விலங்காகவும் பார்த்து வருகிறான் என்றும் கூறினார். இதனையே பரிசாக அளித்துவிடலாம் என்று முடிவு செய்து தன் மகன் இளமருதனிடம் மையூர்கிழார் கொடுத்து அனுப்பினார்.

## தேவாங்கு கவர்தல்

கடல் வணிகத்தில் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காகவே சூல்கடல் முதுவனின் மகளை மணம் பேசி முடித்தனர். மதுரைக்குக் கொண்டு செல்லப்பட்ட தேவாங்கு விலங்கு அரண்மனையில் சக்கரவாகப் பறவைக்காக அமைக்கப்பட்ட மேடையில் வைத்திருப்பதைக் கண்ட அந்துவன் மிகவும் கோபமடைந்தான். பின்னர் அவ்விடம் நீக்கி பாண்டரங்கம் மேடையில் வைக்கப்பட்டது. அரண்மனை மணவிழாவிற்குத் தயாராகிக் கொண்டிருந்த நிலையில் அதனைத் திசைவேழர் சுற்றிப்பார்த்துக் கொண்டிருந்தார். அந்துவன் அந்நேரத்தில் கூண்டில் அடைக்கப்பட்ட தேவாங்கை சிறு குச்சி கொண்டு தொல்லைத் தந்தான். அதைக் கண்ட திசைவேழர் ஆச்சரியத்தில் மூழ்கினார். தேவாங்கு அச்சத்தில் பல இடங்களில் ஓடி அமர்ந்த போது அது வடதிசை நோக்கி அமர்வதைக் கண்டார். கூண்டை விட்டு வெளியே அனுப்பிய போதும் அது அங்கும் இங்கும் ஓடி அலைந்து மீண்டும் வடக்கு திசை நோக்கியே அமர்ந்தது. திசை காட்டும் அதிசய விலங்கு என்றும் அதனைக் கடல் வணிகத்தில் பயன்படுத்த முடிவு செய்து இச்செய்தியை மன்னரிடத்தில் திசைவேழர் எடுத்துக்கூறினார். தேவாங்கை கவர்வதற்கு பறம்பு நாட்டின் மீது போர் தொடுக்க குலசேகரப் பாண்டியன் முடிவு செய்தான். பாண்டிய நாட்டுத் தளபதி கருங்கைவாணன் “பறம்பு நாட்டிற்குள் நுழைவதும் பாரியின் மீது போர் தொடுப்பதும் அவ்வளவு எளிதான காரியம் அல்ல” என்றும் தற்போது சோழர்கள் போர்தொடுத்து தோல்வியைத் தழுவியச்

செய்தியை எடுத்துரைத்தான். பறம்பு நாட்டு வீரர்களுக்கு நிகரானவர்கள் திரையர் குலமே. அவர்கள் மிகவும் வலிமையானவர்கள். ஆனால் எண்ணிக்கையில் குறைவானவர்கள். இவர்களை முதலில் நாம் சிறைபிடிக்க வேண்டும். ஏனென்றால் பறம்பு நாட்டைப் பற்றி முழுமையாக அறிந்தவர்கள் அவர்களே. அவர்களின் வீரம் கடல் வணிகத்திற்கு பெரிதும் பயன்படும் என்றும் தேவாங்கை கொண்டுவர அவர்களால் மட்டுமே முடியும் என்று உரைத்தான்.

திரையர்கள் சற்றும் எதிர்பார்க்காத நேரத்தில் அவர்கள் மீது போர் தொடுத்து திரையர்களின் தலைவனான காலம்பனையும் அக்குலம் முழுவதையும் கருங்கைவாணன் சிறை பிடித்தான். சிறைபிடிக்கப்பட்ட திரையர்கள் மதுரைக்குக் கொண்டுவரப்பட்டனர். கருங்கைவாணன் காலம்பனிடம் உன்னுடைய குலம் விடுவிக்கப்பட வேண்டும் என்றால் பறம்பு நாட்டின் தெய்வவாக்கு சொல்லும் தேவாங்கு விலங்கை கவர்ந்து வர வேண்டும் எனவும் உத்தரவிட்டான். தன் குலம் காப்பாற்றப் பட வேண்டும் என்பதற்காக வேறு வழியின்றி காலம்பன் தேவாங்கைக் கவர்ந்து வர முடிவு செய்தான். தேவாங்கைக் கவர்ந்து வரும் சூழலில் காலம்பனுக்கும் பாரிக்கும் மிப்பெரிய யுத்தமே நடந்துகொண்டிருந்தது. இருவரும் சண்டையிடும் போது, தன்னுடன் போர் புரிவது பாரி என அறிந்ததும் மிகவும் மனம் வருந்தினான். பாரியும் அதற்கு இணையாக பறம்பு நாட்டின் ஆதி குலம் திரையர்கள். அக்குலத்தின் தலைவனோடு போர் செய்தேனா? என வருந்தி அவனை தன் குலம் எனக் கட்டித் தழுவிக் காலம்பனைப் பாரி நண்பனாக ஏற்றுக்கொண்டான். இறுதியல் காலம்பனுக்கு 40க்கும் மேற்பட்ட தேவாங்குகளைக் கொடுத்தனுப்பியும் திரையர் வீரர்களுடன் நீலன் உள்பட சில பறம்பு வீரர்களை அனுப்பி திரையர் குலத்தையும் தேவாங்கையும் மீட்கப் பாரி துணையாக நின்றான். ஆநிரை(பசு) கவர்தல் போரின் மரபாக சங்ககாலத்தில் பின்பற்றப்பட்டாலும் புதினத்தில் பாரியின் செல்வமான தெய்வவாக்கு சொல்லும் தேவாங்கு விலங்கைப் பாண்டியர்கள் ஆநிரையாகக் கருதினர். இவ்விலங்கைக் கவரவே பாண்டியர்கள் திரையர்கள் மூலம் கவர்ந்து வந்த செய்தியைப் புதினத்தின் வழி அறிய முடிகிறது.

## போர் அறிவித்தல்

ஒரு மன்னன் பகைவரோடு போரிடக் கருதுவானாயின் உடனே படை எடுக்க மாட்டான். தனது கருத்தைப் பகைவரது நாட்டார்க்குப் பறையறைந்து தெரியப் படுத்துவான். அப்போது,

"ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்

பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்

தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்

பொன்போற் புதல்வரைப் பெறாதீரும்

எம் அம்பு கடி விடுதும் நும்மரண் சேரும்"

என்று அறிவிக்கப்படும் (Subramaniyan, 2010a). இதனால் தமிழர் போர் தொடங்கும் போது அற நெறியுடன் தொடங்கினர் என அறியலாம்.

"பலிபெறு நன்னகரும் பள்ளியிடனும்

ஒலிகெழு நான்மறையோர் இல்லும் - நலிவொரீஇப்

புல்லா இரியப் பொருநர் முனை கெடுத்த

வில்லார்க்கு அருள் சுரந்தான் வேந்து."

என்ற வரிகளின் மூலம் போர் நடக்கும் நாட்டில் மறவர்கள், பலியிடப்படும் கோவில்களுக்கும், துறவிகள் வாழும் பள்ளிகளுக்கும், வேதவொலி மிக்க அந்தணர்களின் இல்லங்களுக்கும் எந்த நலிவையும் செய்யவில்லை. இவை போன்ற தக்கார் உறையும் இடங்களை நீக்கிப் பிற இடங்களில் போரிட்டுப் பகைவரை வென்றுள்ளனர். அவ்வாறு அறநெறிப்படி போரிட்ட மறவர்களுக்கே மன்னனும் சிறப்பு செய்தான். அதுவே அரசியல் அறமாகக் கருதப்பட்டது (Puliyur Kesigan, 2009).

## வேள்பாரியில் போர் அறிவிப்பு

பாரியுடன் போர் நிகழ்த்தி அவனை வீழ்த்துவதற்காக மூவேந்தர்களும் பறம்பு நாட்டைச் சுற்றி பாசறை அமைத்துக் காத்திருந்தனர். பறம்பு நாட்டின் ஒரு பகுதியான பெருமேட்டின் உச்சியில் பாண்டிய மன்னனும், தென்புறத்தில் சேரனும், வடபுறத்தில் சோழனும் பாசறை (மூஞ்சல் நகர்) அமைத்தார்கள். பாசறை அமைத்தது பாரி மன்னனுக்குத் தெரிந்தும் அவன் போர் தொடங்காமல் இருப்பது மூவேந்தர்களுக்கும் வியப்பையே தந்தது. போர்ச் சடங்கு நடத்துவதற்கும், போரைத் துவங்குவதற்கும் உண்டான நாட்களைக் குறிப்பதற்காக வானியல் அறிவில் சிறந்தவரான திசைவேழரை அழைத்து ஆலோசனை கேட்டனர். ஆனால் திசைவேழரின் மனம் "பலி நிலத்துக்குக் குறி சொல்லும் இழி செயல் செய்யேன்" எனக் கூற முற்பட்ட போது, மூவேந்தர்களையும் பார்த்து போரைத் தவிர்க்க வழியேதும் இல்லையா? என்று கூறியவுடன் சேரன் அதிர்ச்சிக்குள்ளானான். திசைவேழரிடமிருந்து இவ்வார்த்தையை பாண்டிய மன்னன் சற்றும் எதிர்பார்க்கவில்லை. பாசறையில் அமைதி நீட்டித்த நிலையில் முசுகுந்தர் பேச்சை மாற்றினார். இறுதியில் பாரியின் மீது நிகழ்த்தப் போகும் போரை அறிவிப்பதற்காக பாரியின் நெருங்கிய நண்பரான கபிலரை அழைக்க முடிவு எடுத்தனர்.

கபிலரை அழைக்க சுருள் மடலுடன் சாகலைவன் வந்தான். கபிலரும் வருகை தந்தார். கபிலரோடு அலவனும்(சிறுவன்) வந்திருந்தான். கபிலர் சென்ற தேர் மூஞ்சல் நகரை அடைந்தது. மூவேந்தர்களும் கபிலரை வணங்கி வரவேற்றனர். பல்வேறு உபசரிப்புகளுக்குப் பிறகு போர் பற்றிய பேச்சு எடுக்கப்பட்டது. கபிலரிடம் பேரரசுகளோடு பாரியை இணங்கிப் போகச் சொல்லுங்கள் என்று வேந்தர்கள் உரைத்த போது கபிலர் மறுமொழி ஏதும் பேசாது நின்றார். பாரி எங்களுடன் போரிட வேண்டாம், மீறி போர் தொடுத்தான் என்றால் பாரியின் மரணம் நிச்சயம் என்று எச்சரிக்கை விடுத்தது மட்டுமல்லாமல் போருக்குத் தயாராகும்படி கபிலர் மூலமாகப் போர் அறிவிப்பும் விடுக்கப்பட்டது. சங்க காலத்தில் பறை அறைந்து போருக்கு அழைப்பு விடுப்பது போல புதினத்தில் கபிலர் மூலமாக அழைப்பு விடுக்கப்பட்டதை ஆய்வில் கண்டறிய முடிகிறது.

## பூப்புனைதல்

சங்க காலத்தில் மறவர் போர் தொடங்கும் போது நிகழ்வுக்கேற்ற அடையாளப் பூவைச் சூடுதல் வழக்கம். ஆநிரை கவரச் செல்வோர் வெட்சிப் பூவையும், ஆநிரையை மீட்கப் போவோர் கரந்தைப் பூவையும், பகைவர் நாட்டின் மீது படை எடுப்போர் வஞ்சிப் பூவையும், அரணைக் காப்போர் நொச்சிப் பூவையும், அரணை முற்றுகை இடுவோர் உழிஞைப் பூவையும், போர்க்களத்தில் நுழைந்துப் போரிடுவோர் இரு திறத்தாரும் தும்பைப் பூவையும், போரில் வெற்றி எய்தியோர் வாகைப் பூவையும் சூடுவர். இவ்வாறு பூச்சூடுங்கால் உண்மைப் பூவைச் சூடுவதோடு பொற்பூவைப் புனைதலும் உண்டு. அரசர் மறவர்க்கு பொற்பூ வழங்கிச் சிறப்பித்தலும் உண்டு. முருகன் கிரவுஞ்ச மலையை வெல்லுங்கால் காந்தட் பூச் சூடினான் என்றும், சிவபெருமான் முப்புரத்தை எரித்த காலத்தில் உழிஞைப் பூச்சூடினான் என்றும் கூறுவர்.

"வெட்சி நிரை கவர்தல்; மீட்டல் கரந்தையாம்

வட்கார் மேல் செல்வது வஞ்சி; உட்காது

எதிர்ஊன்றல் காஞ்சி; எயில்காத்தல் நொச்சி

அது வளைத்தல் ஆகும் உழிஞை-அதிரப்

பொருவது தும்பையாம்; போர்க்களத்து மிக்கோர்

செரு வென்றது வாகையாம்" (Ilampooranar, 2005)

என்ற தொல்காப்பிய வரிகளின் மூலம் போர் நடைபெறும் காலத்தில் வீரர்கள் அணியும் பூக்கள் பற்றிச் சுட்டியுள்ளது எண்ணத்தக்கது. சங்ககாலத்தில் போரில் வெற்றி பெறும் வீரர்களுக்கு வாகை

மரத்தின் பூக்களைச் சூட்டுவார்களாம். அதனால் தான் "போரில் வெற்றி வாகை சூடினான்" என்னும் சொல்லாடல் உருவாகியதாகச் சொல்லப்படுகிறது (Govindan, 2003).

## வேள்பாரியில் பூப்புனைதல்

வேள்பாரி புதினத்தில் எங்கும் படைவீரர்கள் பூக்களைச் சூடி போர் புரிந்ததாக குறிப்புகள் இல்லையென்றாலும் ஒரு இடத்தில் வாகைப்பூ பற்றிய குறிப்புகள் இடம்பெறுகிறது. புதினத்தில் பறம்பு நாட்டின் ஒரு பகுதியான வேட்டுவன்பாறையில் நீலனின் மனைவியான மயிலாவுக்கு நிறைசூல் விழா சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மகப்பேறு நிலையில் இருக்கும் பெண்களுக்கு நடக்கும் பெருவிழா என்று அதனைக் கருதுவர். இவ்விழாவின் போது வள்ளிக்கூத்தும் நடைபெறும். ஆண்கள் கலந்துகொள்ள இங்கே அனுமதியில்லை. ஆண்களுக்குத் தெரியாமல் பறம்பு நாட்டில் நடக்கும் ஓர் மர்மவிழா என்றே கூறுவர். படைக்களத்தில் இருந்து மயிலாவைக் கான நீலன் புறப்பட்டான். படைக்களத்தில் பாரி - கபிலர் இடையே நடைபெற்ற உரையாடலின் போது "போரில் அறம் நீண்ட நேரம் உயிர் வாழாது" என்ற கபிலரின் கூற்று நீலனுக்குப் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது. போர் பற்றிய சிந்தனையே மனதில் நெடுநேரம் நினைத்துக்கொண்டிருந்த வேளையில் அவன் வரும் வழியில் திடீரென ஓர் ஓசையை உணர்ந்தான். அதைக் கண்டதும் நீலன் சற்றே வியப்படைந்தான். அவன் பார்த்தது குமரிவாகை மரத்திலிருந்த கருங்கிளியைத்தான். அதைக் கண்டதும் போருக்கான நல்ல நிமித்தமாகவே நீலன் கருதினான். அங்கிருந்த குமரிவாகை மலர்களைப் பறித்துக் கொண்டு வேட்டுவன்பாறைக்குப் புறப்பட்டான். மலர்களால் மயிலா அலங்கரிக்கப்பட்டிருந்தாள். நீலனைக் கண்டதும் பாரியின் மனைவியான ஆதினி "நீ கொண்டுவந்த பூவை இப்போது அவளுக்குச் சூட்டு" என்றதும் நீலன் மறுமொழி சொல்லாமல் மயிலாவையே பார்த்துக் கொண்டிருந்தான். "என்ன பேசாமல் இருக்கிறாய்?" என ஆதினி மீண்டும் கேட்டதற்கு, மயிலாவைப் பார்த்துக் கொண்டே நீலன் சொன்னான் "நிறைசூல் பெண்ணின் மலர்ந்த முகத்துக்கு இணையான மலர் இதுவரை கண்டறியப்படவில்லை. நான் எந்தப் பூவைச் சூட்டுவேன்?" என்று உரைத்த போது, அவன் சொல் கேட்டு ஆதினியில் கண்கள் கலங்கின. நீலனைத் தன் மகன் எனத் தழுவி நெற்றி முகர்ந்து முத்தம் கொடுத்தாள். அப்போதுதான் கவனித்தாள், நீலன் கொண்டு வந்தது குமரிவாகை. "வாகைப்பூவையா பறித்து வந்தாய்? வாகை மரம் கொற்றவை குடிகொள்ளும் மரமல்லவா? இந்தப் போர்க்களத்தில் போர் தெய்வத்தின் பூக்கள் உன்னிடமே இருக்கட்டும். அவை உனக்கானவை" என்றாள். எனவே புதினத்தில் ஒரு வீரன் வாகைப்பூ சூடுவது சங்ககாலப் போர் மரபோடு ஒத்திருக்கின்றது.

## முடிவுரை

சங்க காலத்தில் பல வகையான போர் மரபுகள் இருப்பினும் தொல்காப்பியர் போர் மரபை இலக்கணத்தோடு எடுத்துரைதுள்ளார். தொல்காப்பியர் குறிப்பிட்ட போர் மரபுகளும் இக்கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. ஒற்றறிதல், ஆநிரை கவர்தல், போரை அறிவித்தல், நிமித்தம் பார்த்தல், பூப்புனைதல், பாசறை அமைத்தல், பகைவர் மீது வஞ்சினம் கொள்ளுதல், போர் படையை ஆயத்தப்படுத்துதல், முடி சூடுதல் ஆகியவை சங்க காலப் போர் மரபில் குறிப்பிடத்தக்கவை. இருப்பினும் ஒரு சிலவற்றை மட்டுமே வேள்பாரி எனும் புதினத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டுள்ளன. சங்க காலத்தில் பிற நாட்டை ஒற்றர்கள் உளவு பார்ப்பது போல வேள்பாரி எனும் புதினத்தில் பாணர்கள் வேடத்தில் ஒற்றர்கள் பறம்பு நாட்டை உளவு பார்க்கின்றனர் என்ற செய்தி புலனாகிறது. சங்க காலத்தில் ஆநிரை கவர்தல் எனும் போர் மரபைப் போலவே இப்புதினத்தில் பறம்பு நாட்டின் செல்வமாக கருதப்பட்ட தேவாங்கு விலங்கு பகைவர்களால் கவர்ந்து செல்வதை அறியமுடிகிறது. போர் நிகழ்வதற்கு முன்பாக பறை அறைந்து போரை அறிவித்தது போல இங்கு மூவேந்தர்களும் கபிலர் மூலமாக போரை அறிவித்த செய்தி புதினத்தில் வெளிப்பட்டு நிற்கின்றது. சங்க காலத்தில் வீரர்கள் பூச்சூடி போரை நிகழ்த்தியது போலவே, வாகைப்பூ சூடிய ஒரு வீரன் பற்றி இப்புதினம் எடுத்துரைத்துள்ளது.

## References

Govindan, (2003) Pandai Tamizhar Por Neri, Tamizh Taai Pathippagam, Chennai, India.

Ilampooranar, (2005) Tholkappiyam Porulathikaram, Saratha Pathipagam, Chennai, India.

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Puliyur Kesigan, (2009) Puraporul Venbamalai, Saradha Pathippagam, Chennai, India.

Subramaniyan, S.V. (2010a), Sanga Ilakkiyam Pathupattu, New Century Book House, Chennai, India.

Subramaniyan, S.V. (2010b), Sanga Ilakkiyam Ettuthokai, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License